Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | SESSIONS JUDGE, MAHILA COURT, CHENGALPATTU. |

Calender ..

Miscellaneous ..

Preliminary Register ..

Sessions .. SC.No. 213/2022

Prosecution .. P.W.1

Deposition of Witness for

Court

Name :.. திருமதி.ரேவதி

| | | | |
|---|---|---|---|
| Husband's Name | :.. திரு.லாரன்ஸ் | Caste | :.. |
| Village | : | Religion | :.. |
| Taluk | : | Age | :.. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2024.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**அ.சா. 1 முதல் விசாரணை-**

**( எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. இ.குமரகோட்டி ஆஜரில் இருந்தார். )**

என் பெயர் ரேவதி. என் கணவர் பெயர் லாரன்ஸ். நான் தற்போது நெ.28 ஏ ஹச் பிளாக், பல்லாக்குமா நகர், மயிலாப்பூர் , சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1 வது எதிரி லாரன்ஸ், அவர் என் கணவர், 2 வது எதிரி ரீட்டா மேரி, அவர் என் மாமியார். என் அப்பா பெயர் பி.ஏ. பாலசுப்பிரமணியன், அவர் வாட்ச்மேனாக வேலை செய்கிறார். என் அம்மா வீட்டில் தான் இருக்கிறார், என்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-1.pdf

தம்பி பி.மோகன்ராஜ் ஏசி மெக்கானிக்காக வேலை செய்கிறார். என் அண்ணன் பி.சங்கர் வேலை இல்லாமல் வீட்டில் தான் இருந்தார். 27.10.2010 ல் பையனூரில் 1 வது எதிரிக்கும் எனக்கும் பெரியவர்களால் நிச்சியிக்கப்பட்டு திருமணம் நடந்தது. என் உறவினர் ஜெயராமன் மூலமாக தான் எதிரிகள் வீட்டார் என்னை பெண் பார்க்க வந்தார்கள். திருமணத்தின் போது எனக்கு 12 பவுண் நகை மற்றும் 150 சிசி பல்சர் பைக் ஒன்று, மற்றும் சீர்வரிசை பொருட்கள் என் அப்பா , அம்மா கொடுத்தார்கள். திருமணத்திற்கு பிறகு பள்ளிக்கரணையில் பாலாஜி நகரில் எதிரிகள் வீட்டில் அவர்களுடன் வசித்து வந்தேன், அப்போது 1 வது எதிரி குடிப்பழக்கத்தினால் என்னை தேவையில்லாமல் அடித்தார். ஒரு நாள் வீடு சுத்தம் செய்யும் போது 1 வது எதிரி போதை பொருளுக்கு அடிமையாகி சிகிச்சை எடுத்து கொண்டதற்கான அட்டை என்னிடம் கிடைத்தது. இதை பற்றி நான் 2 வது எதிரியிடம் கேட்ட போது இதை பற்றி வெளியில் சொன்னால், உன்னை அடித்து கொன்றுவிடுவோம் என்று மிரட்டி வைத்தார்கள். திரும்பவும் 1 வது எதிரிக்கு குடிப்பழக்கம் அதிகமாகி என்னை அடித்து கொடுமை படுத்தி கொண்டே வந்தார். இதை என் வீட்டில் தெரியபடுத்தலாம் என்று நான் போனை எடுத்து போன் செய்ய முயன்ற போது என்னுடைய போனை எதிரிகள் பிடுங்கி போன் இருந்தால்தானே பேசுவாய் என்று சொல்லி போனை உடைத்து விட்டார்கள். அதன்பின்னர் என்னை மாடியில் இருந்து தரதரவென்று கீழே இழுத்து வந்து ஒரு அறையில் வைத்து என்னை பூட்டினார்கள். நீ உயிருடன் இருந்தால் தானே பிரச்சனை, உன்னை கொன்று போட்டுவிடுவேன் என்று 1 வது எதிரி கத்தியை எடுத்து என்னை மிரட்டினார். அதன்பின்னர் 1 வது எதிரி மற்றும் 2 எதிரியும் என்னை மாறி மாறி என்னை கையால் அடித்தார்கள். அதன்பின்னர் நான் அவர்களை பிடித்து தள்ளிவிட்டு வெளியே ஓடிவந்துவிட்டேன். இந்த சம்பவம் 31.12.2010 ம் தேதி இரவு 11.30 மணிக்கு நடந்தது. அந்த இரவில் நான் வெளியே ஓடிவந்த பிறகும் என்னை விடாமல் எதிரிகள் என்னை துரத்தி கொண்டே வந்தார்கள். எதிரிகள் என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள், கோத்தா , உன்னை கொன்றுவிடுவோம் என்று எதிரிகள் திட்டிகொண்டே என்னை துரத்தி கொண்டே

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-1.pdf

வந்தார்கள். அங்கிருந்து மெயின் ரோட்டிற்கு ஓடி வந்த போது அங்கு வந்த ஆட்டோவில் ஏறி நான் என் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பின்னர் வீட்டிற்கு போனதும் என் பெற்றோரிடம் நடந்ததை சொன்னேன். அதன்பின்னர் என் பெற்றோர்கள் பள்ளிக்கரணை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். 06.01.2011 ம் தேதி பள்ளிக்கரணை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த பிரச்சனையினால் நான் ரொம்ப கஷ்டப்பட்டுவிட்டேன். என் அப்பாவும் இறந்துவிட்டார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

நான் பி.ஏ பொருளாதாரம் படித்துள்ளேன். சம்பவ இடம் எதிரிகளின் சொந்த வீடாகும். அந்த வீட்டிற்கும் என் அம்மா வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் அது எனக்கு தெரியாது. ஆட்டோவில் போனால் அரைமணி நேரம் ஆகுமா என்றால் எனக்கு அது தெரியாது. பள்ளிக்கரணை போலீசாரிடம் புகார் கொடுத்தேன். எதிரிகள் வீட்டில் இருந்து பள்ளிக்கரணை காவல் நிலையம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் அரை மணி நேரம் ஆகும். காவல் நிலையத்திற்கு என்னுடன் என் அண்ணன், வழக்கறிஞர் ஆகியோர் வந்தார்கள். புகார் மனுவை வக்கீல் எழுதவில்லை நான் தான் எழுதினேன். காவல் நிலையத்திற்கு வெளியே நின்று தான் எழுதினேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லும் சம்பவம் 31.12.2010 ல் தான் நடந்தது. புகாரின் படி இரவு 11.30 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். இரவு 11.30 மணிக்கு எதிரிகள் வீட்டில் இருந்து அவர்கள் என்னை மாறி மாறி அடித்து என்னை கொல்ல வந்ததால் நான் வெளியே வந்து ஆட்டோ பிடித்து என் அம்மா வீட்டிற்கு போய்விட்டேன். இரவே என் அம்மா வீட்டிற்கு போய்விட்டேன். அன்று இரவே நடந்த சம்பவத்தை என் அம்மா, அப்பா, அண்ணன் ஆகியோரிடம் சொல்லிவிட்டேன். மறுநாள் காலையிலோ, அதற்கு மறுநாளோ நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான், நான் அங்கிருந்து போன பிறகு அதிர்ச்சியில் இருந்ததால் 06.01.2011 ல் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் காலதாமதத்திற்கான காரணம் பற்றி

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-1.pdf

சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டியதாக போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எதிரிகள் வரதட்சணை கொடுமை செய்ததாக கூறவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் , எதிரிகள் மீது பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த சம்பவம் நடந்த பிறகு எதிரியுடன் சேர்ந்து வாழ நான் முயற்சி செய்யவில்லை என்றால் அவர் தான் என்னை கொல்ல வந்தாரே எப்படி போகமுடியும். நான் விவாகரத்து வழக்கு போட்டுள்ளேனா என்றால் ஆமாம். ஆனால்1 வது எதிரி நீதிமன்றத்திற்கு வரவில்லை என்பதால் ஒரு தலைபட்ச உத்தரவானது. நான் ஒரு தலைபட்சமாக விவாகரத்து உத்தரவு பெற்றேன் என்றால் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. எந்த வருடம் உத்தரவானது என்றால் 2 வருடத்திற்கு முன்பு உத்தரவானது. நான் விவகாரத்து வாங்கிய பிறகு நான் 2 வது திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு ஆரம்பித்தில் இருந்தே 1 வது எதிரியை பிடிக்கவில்லை என்பதால் வக்கீலின் ஆலோசனை படி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் வழக்கு பதிவு செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக மறுநாளோ, அதற்கு அடுத்த நாளோ புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளை பழிவாங்குவதற்காக பொய்யாக காலதாமதமாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-1.pdf

www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-1.pdf